10. அரசினர் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம்,

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''இன்று நிகழ்ச்சி நிரலிலே அரசினர் சட்டமுன்வடிகளிலே 3-வது இனமாக கொடுக்கப்பட்டுள்ள '' 1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) மற்ற சட்ட முன்வடிவுகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்பு சட்ட முன் வடிவு 1983

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

(முற்பகல் 11.20.)

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் இந்த விஷயத்தைப்பற்றி கொஞ்சம் விவரமாக விளக்கினால் நாங்கள் பேசுவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்திய முறை மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள், ஆயுர்வேதம் படித்தவர்கள், யுனானி படித்தவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தனியாக ஒரு ரிஜிஸ்தர் வைத்து இருக்கிறோம். ஆனால் அது சட்டபூர்வமாக இல்லை. அதைச் சட்டபூர்வமாக்கினால் நல்லது என்று மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டார்கள். அதற்குக் காரணம் மத்தியில் ஒரு தேர்தல் நடக்கிறது. அந்தத் தேர்தலில் நம் மாநிலத்திலே உள்ள இந்திய முறை மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் போன்றவர்கள் எல்லாம் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தப் பட்டியலையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் சொன்னோம். சொன்னவுடன் அவர்கள்

---

*1983ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.